ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

सदाहं संसाराभिधदहनसंपीडिततनुः
हितं कर्तुं स्वीयं विकलनिजसर्वेन्द्रियगणः ।
अशक्तश्शोचामि त्वमिममधुना दिव्यकरुणा
सुधापूरैस्सिक्त्वा जननि गिरिजे ते सुतमव ॥

ஸதாஹம் ஸம்ஸாராபிததஹநஸம்பீடிததநு:
ஹிதம் கர்த்தும் ஸ்வீயம் விகலநிஜஸர்வேந்த்ரியகண: ।
அசக்தஶ்ஶோசாமி த்வமிமமதுநா திவ்யகருணா
ஸுதாபூரைஸ்ஸிக்த்வா ஜநநி கிரிஜே தே ஸுதமவ ।

ஹே ஜநநி கிரிஜே உலகங்களுக்கெல்லாம் மாதாவாய் விளங்கும் ஹே பார்வதி தேவி ! நான் எப்பொழுதும் ஸம்ஸாரமென்று பெயர் கொண்ட அக்கினியால் தஹிக்கப்பட்ட சரீரத்தையுடையவனும் அதினால் எனக்கு வேண்டிய ஹிதமான காரியங்களைச்செய்துகொள்வதற்குக் கூட சக்தியில்லாமலிருக்கும் இந்திரிய ஸமூகங்களையுடையவனாய்க் கொண்டு மிகவும் கஷ்டப்படுகிறேன். இவ்விதம் கஷ்டப்படும் உன்னுடைய புத்திரனான என்னை உனது சிறந்த கருணையாகிற அமிருதப் பிரவாகங்களால் ஸ்நானம் செய்யும்படி செய்து எனக்கேற்பட்டிருக்கும் தாபத்தைப்போக்கிப் பாதுகார்ப்பது உன் கடமையாகும்.

பிள்ளைகளுக்குத் தாயாராயிருப்பவர்கள் எப்பொழுதும் அந்தப் பிள்ளைகளுக்கு ஹிதத்தையே அவர்களாகச் செய்வார்கள் என்பது பிரஸித்தம். அவ்விதமே உலகிலும் நடைபெற்று வருகின்றது. ஹே தேவி எம்போன்ற ஸகல ஜனங்களுக்கும் மாதாவாகவிளங்குகிறவளாயும், எதையும்செய்யக்கூடிய சக்திவாய்ந்தவளாயுமிருக்கும் நீ என்னுடைய வேண்டுகோளில்லாமலே புத்திரனான எனக்கு ஹிதத்தைச் செய்யவேண்டியது அவச்யம் அவ்விதம் செய்யாமலிருந்தாலும் நானாகக் கேட்டுக்கொண்ட பிறகும் தாமதிப்பது உசிதமில்லை. ஆகையால் உடனே உன் கருணைக்கு என்னைப் பாத்திரனாகச் செய்து அனுக்கிரகிக்க வேணுமென்று ஒருபக்தர் பிரார்த்திக்கிறார்.

சுபம் !

உபபத்திராதிபர்.

# வரதக்ஷிணை.

(146-வது பக்கத்தொடர்ச்சி)

நம்மிடமிருக்கும் நற்குணங்கள் பூராவும் ஜாதிக்கும் கீழான நிலமையை அடையட்டும். நம் சிறந்த ஸ்வபாவமும் பலவாருக மாறிவிடட்டும். நம்முடைய பந்து ஜனங்கள் எவ்விதக் கஷ்டங்களையும் அடையட்டும். நமது பராக்கிரமம் அடியோடு போய்விட்டாலும் சரி, பொருள், ஒன்றுதான் நமக்கு அடையவேண்டியதேயல்லாமல் அதைவிட்டு வேருன ஜாதி, குணம், முதலியயாவும் உபயோகமேயில்லே. ஆகையால் எவ்விதக் கெட்ட பெயர் வந்தாலும், எதை விட்டாலும், பொருளே சம்பாதிக்க வேண்டியது முக்கியம் என்பதே நோக்கமாகும்.

இதற்கிணங்க தற்காலத்திலும் விவாகமென்கிற பெயரை வியாஜமாகக்கொண்டு தமக்கு எந்தமாதிரி தோஷமேற்பட்டாலும் அற்பமும் அதைப் பொருட்படுத்தாமல் பணத்தை ஸம்பாதிக்க வேண்டுமென்றே கங்கணம் தரித்திருக்கிருர்கள். ஆகையால்தான் விவாககாலத்தில் தமக்குத்தோன்றியபடியெல்லாம் பெண்வீட்டுக்காரனிடம் ஹிம்ஸித்துப்பணம், ஆபரணம், முதலியவைகளைப் பெற்றும் வரன் என்னும் தம் நோட்டுக்கு வரவேண்டிய பூராத்துகையும் குடுக்கவில்லேயென்று கருதி, ஆடி என்றும், ஆருமாதமென்றும், தீபாவளி என்றும், பல சமயங்களேச்சொல்லி அவ்வக்காலங்களிலும், தமக்குத்தோன்றியவாறு வசூலிக்கிருர்கள். இவ்வளவும் போராமல் சாந்திமுகூர்த்த சமயத்தில் தம்நோட்டிற்குப்பின்னும் வரவேண்டிய பாக்கி இருக்கென்று நினைத்து எல்லே மீறி கண்டபடி எல்லாம் பெண்வீட்டுக்காரனேக் கஷ்டப்படுத்தித்தான் நேரிலும் பையன் மூலமாகவும் பலவாருக ஸாமான்களுக்கு ஜாப்தாக் கொடுத்து இந்தப் பாபியிடம் நாம் தெரியாமல் ஸம்பந்தம் செய்துகொண்டு விட்டோமே என்று மிகுந்த வருத்தத்துடன்

செய்யாத காரியத்தைச் செய்தாவது மானத்திற்கஞ்சி அப்பாபி யின் இஷ்டப்படியெல்லாம் செய்து கல்யாணம் என்று பெயரை மாத்திரம் வார்த்தையால் வெளிக்குச் சொல்லிக்கொண்டு அதற்கு நேர் விரோதமான காரியத்தில் போல் சொல்லவொண்ணாத துக் கத்தை அடைகிறார்கள். அந்தோ! என்ன அநியாயம் பாருங்கள். இந்த மாதிரி தாமும், பிள்ளைகளும், பெண்டீர்களும். வெவ்வேறு விதமாக பெண்வீட்டுக்காரர்களை ஹிம்ஸிப்பது எந்த தர்மத்தில் சேர்ந்ததோ தெரியவில்லை. இவ்விதம் எல்லையில்லாமல் பொருள் சம்பாதிக்க வேண்டுமென்று பேராசை அதிகம் ஏற்பட்டுவிட்டபடி யால் விவாகத்திற்குள்ள வைதிகமான நியமங்களை ஒன்றையும் இக்காலத்தில் சிலர் கவனிப்பதில்லை. விவாகம் என்கிற இந்தக் காரியம் வைதிகமான ஸம்ஸ்காரமென்றும் இதை விதிப்படி சரி யாய் அனுஷ்டித்தால் இவ்வுலகிலும், பரலோகத்திலும், விசேஷ மான சிரேயஸ்ஸை அடையலாமென்று அதற்கு வேண்டிய ஸ்திரீ புமான்களுடைய குலம், வயது, காலம், கோத்திரம், ஜாதகப் பொருத்தம் முதலான விஷயங்களை நன்றாய் கவனித்துநடத்தும் படி கருணாநிதிகளான பல மஹரிஷிகள் கூறியிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் விட்டுப்பணப்பொருத்தம் ஒன்றுதான் இக் காலத்தில் முக்கியமாய்க் கவனிக்கப்படுகிறது. அந்தப் பொருத்த மிருந்தால் பாக்கிகளெல்லாம் எவ்விதமிருந்தாலும் பொருந்திப் போய் விடுகின்றன. அதில்லாவிட்டால் மற்றவைகள் எவ்வ ளவு பொருத்தமாயிருந்தாலும் உபயோகமில்லை. இதைப் பார்த் தால் அவரவர்களும் பிள்ளைகளை மாடு, குதிரைகளைப்போல் கிரயத் திற்கு விற்பதாக உத்தேசித்து விலை கூறுவதாகத் தோன்றுகிற தே யல்லாமல் சாஸ்திரீயமான வைதிகஸம்ஸ்காரமாகநினைத்திருப் பதாகத் தோன்றவில்லை. ஒன்றைப் பெற வேண்டுமென்கிற அவா அதிகமாக ஒருவருக்கிருப்பின் அதின் பொருட்டு ஏற்படும் பாபம் விதிக்கு மாறுதல், பிறர் நிந்தை, முதலான ஒரு தோஷங்களையும் சற்றும் கவனிக்கமாட்டார். விவாக விஷயத்திலும் வரதக்ஷி ணையாகப் பொருளை அதிகம் பெறவேண்டுமென்று கங்கணம் பூண்டவர்களுக்கு மற்றொன்றையும் கவனிக்க முடியாமல் தோ ன்றியபடி நடத்தும்படி வந்து விட்டது. இவ்விதம் நாமாக ஏற் படுத்திக்கொண்டதும் பல கஷ்டங்களுக்குக் காரணமாக வளர்ந்து வருகிறதுமான இந்த வரதக்ஷிணையை நாமாக விலக்கவேண்டிய

தற்குத் தகுந்த முயற்சி எடுத்துக்கொண்டு முன் காலங்களில் நம் பெரியோர்கள் அனுஷ்டித்தபடி நாமும் தற்காலமும் விவாக கர்மாவை அனுஷ்டிக்க முன் வந்தாலொழிய இக்கொடிய கஷ்டம் நமக்கு நீங்காது.

உபபத்திராதிபர்.

---

## ஸாவித்ரசயனமும் நிரூட பசுபந்தயாகமும்.

கும்பகோணம், ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்காராசார்யஸ்வாமிகளின் திவ்யானுக்கிரகத்தால் சென்ற வஸந்த ருதுவில் ஸோமயாகம் செய்து பவித்ரர்களான, சிதம்பரம் ஸோமயாஜி நடேச தீக்ஷிதர்கள் பங்குனிமீ 12வ ஷ்டி க்ஷேத்திரத்தில் ஸாவித்ர சயனத்துடன் கூட நிரூடபசுபந்தயாகத்தை அனேக பிராமணர்களுடனும் ருத்விக்குகளுடனும் மகாமகோபாத்தியாய சிவதண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர்களுடையவும் பிரம்மஸ்ரீமணக்கால் ராகவசாஸ்திரிகளுடையவும்அனுகூலத்தாலும் ஒத்தாசையாலும் செய்து ஸ்ரீ ஆனந்த நடராஜ மூர்த்தியின் கிருபைக்குப்பாத்திரமானார்கள்.

பசுபந்தமென்றால் என்ன ?

பிராம்மண்யமென்றால் ச்ரௌதமாயும் ஸ்மார்த்தமாயுமுள்ள 40, ஸம்ஸ்காரங்களால் பூர்ணத்வமடைகிறது. (ஸம்ஸ்காரங்கள் என்பதைப் பற்றி பத்திராதிபர்களால் ஆர்யதர்மத்தில் எழுதிவரப் படுகிறது.) அவைகளில்வேதத்தால் கூறினவைகளில் "நிரூடபசுபந்தம்" ஒன்று இதைப் பிரதிவருஷங்களிலும் மழைகாலத்தில் செய்யவேண்டும். அன்றேல்பிரதிநிதியாகவைச்வாநரேஷ்டியாவது செய்யவேண்டும். சில ஸம்ஸ்காரங்கள் தன் ஆயுட்காலத்தில் ஒரே தடவை செய்யவேண்டும். சில பிரதி வருஷமும் சில பிரதிமாதமும் சில ஒவ்வொரு பக்ஷமும் சில ஒவ்வொருநாளிலும் சில ஒவ்வொரு காலமும் செய்ய வேண்டியவைகளாயிருக்கின்றன. இவைகளைச் செய்துவரும் பிராமணர்கள் இப்பவும் நமது பரமாசார்யாளுடைய அனுக்கிரஹத்தால் கர்மானுஷ்டானம் செய்து வருவதால் நமது தேசம் இம்மட்டிலும் ஸுபிக்ஷமாயும், பிராம்மண்யம் விளங்கி வரும்படியாயும் இருக்கிறது. இவைகளால் பாபநிவிர்த்தியும், சித்தசுத்தியுமுண்டாகி ஆத்மானந்தம் உண்டாகிறதே பலம்.

## ஸ்ரீசங்கரஜயந்தி உத்ஸவம் (காட்டுமன்னார்கோவில்)

ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியருடைய ஜயந்தி மகோத்ஸவத்தைச் சென்ற ஆண்டுகள் போல் இப்பவும் நாளது விபவ-ஸூ சித்திரைமீ 12உ மங்களவாரத்தில் (வைசாகசுத்த பஞ்சமி புண்ய தினத்தில்) எனது கிருஹத்தில் செய்வதாய் பகவத்கிருபையை முன்னிட்டு உத்தேசித்திருப்பதால் ஆஸ்திக சிகாமணிகள் தயவு செய்து விஜயம் செய்து கீழ்கண்டபடி கண்டுகளிக்கப் பிரார்த்திக்கிறேன்.

விவபவஸூ சித்திரைமீ 12உ பௌமவாரம் காலை 7-மணி முதல் 8-மணி வரை உபநிஷத்பாராயணம்.

காலை 8-மணி முதல் 9--மணி வரையில் ஸ்ரீ ஆசார்ய பாஷ்ய பாராயணம்.

காலை 9-முதல் 10-30 மணிவரையில் ஸ்ரீ ஆசார்யபிம்ப பாஷ்யாதிகள் பூஜை. பிறகு பிராமணஸந்தர்பணம்

மாலை 3-மணி முதல் 4-30 மணி வரையில் ஸ்ரீ ஆசார்ய சரித்திர உபன்யாஸம். பிறகு பானக பூஜை, மேளக்கச்சேரி, ஊர்வலமும் நடைபெறும்.

கிருஹ்யக்ஞ, வி. உமாமகேச்வரசாஸ்திரி.

---

## செங்கல்பட்டு வைதிக ஹிந்துமஹாஸபை.

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் உத்திரவுப்படி ப்ரஸங்கவா ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் பூந்தமல்லி, திருவள்ளூர், ஸ்ரீ பெரம்பூதூர், மதுராந்தகம், செங்கல்பட்டு, சிவகாஞ்சீ, விஷ்ணுகாஞ்சீ, முதலியவிடங்களுக்கு நேரகச்சென்று பற்பல உபன்யாஸங்கள் செய்துஜில்லா சபை கூட்ட ப்ரபல கனவான்கள் கையெழுத்து வாங்க 1-4-28ல் ஸ்ரீ சிவகாஞ்சீ ஸ்ரீ சங்கரமடத்தில் மிகப்பெரிய மகாநாட்டைக் கூட்டினார், ஷை ஜில்லாவிலுள்ள மற்ற ப்ரஸித்தக்ராமங்களில் அச்சுநோட்டீசுகளனுப்பிக்கண்டனக்கூட்டங்களைநடத்திவைத்தார். 1-4-28ல் ஷை ஸபையின் காரியக்கமிட்டிக் கூட்டம் தேர்

தெடுக்கப்பட்ட தலைவரும் ஜமீன்தாரும் பரமவைதிகாபிமானியும் சிஷ்டரும் பெஸ்ட் அண்டு கோ, துபாஷுமான பிரம்மஸ்ரீ T. S. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் பங்களாவில் கூடி ஸபையில் வரப் போகும் தீர்மானங்களை யோஜித்தது, பகல் 2 30க்கு ஸ்ரீ காமாக்ஷியம்மன் ப்ரஸாதம் வாத்திய கோஷத்துடன் தலைவர் பங்களாவிற்குச்சென்றது.ப்ராம்மணர்கள்வேதகோஷத்துடன்ஆசீர்வாதம் செய்தளித்தனர். 2-45க்குத்தலைவர் மாலையிடப்பட்டு ஊர்வலமாக ஸ்ரீ மடத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

ஸ்ரீமடத்தில் ஸபைக்கெனச் செய்யப்பட்ட பந்தல், தோரணம், கொடி நீதிவாக்கியம் முதலிய அலங்காரங்கள் கண்ணைக் கவர்ந்தன. இரண்டு மணிக்கே ஸ்ரீ மடத்தில் அபரிமிதமான ஜனங்கள் குவிந்து விட்டனர், தலைவரைத்தக்க மரியாதையோடு வரவேற்றினர். மழையையும் கவனியாமல் முன்னதாகவே வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள் பிரம்மஸ்ரீ வாக்குடை சுப்பராமகனபாடிகள் காண்டூர் ச்ரோதார், ரெவினியூ இன்ஸ்பெக்டர், ரிடைர்ட் டிப்டிக் கலெக்டர், கவிதாவல்லப ஸ்ரீ பாஷ்யாசார் சவாமிகள் டிஸ்ட்ரிக்ட் முனிசீப் தாசில்தார்,) வக்கீல் ராமகிருஷ்ணய்யர், ஸ்ரீ அநந்தராமய்யர் B A, B.L வக்கீல் செங்கல்வராயர் பிரம்மஸ்ரீவாகவி. ஸம்ஸ்கிருதபண்டித க. சீனிவாசசாஸ்திரிகள். ராமநாதசாஸ்திரிகள், ஸ்ரீ சர்மா, இம்பீரியல் பாங்க் மானேஜர் ஸ்ரீ கிருஷ்ணசாமிநாயகர், (சென்னை சட்டசபை மெம்பர்) ஸ்ரீ கிருஷ்ணதாதாசார் ஸ்வாமிகள், ராமச்சந்திரய்யர், ஆரணிஸ்கூல் ஹெட்மாஸ்டர் சுப்பிரமணியய்யர் B.A, B.L. முதலியவர்களும், பல கனபாடிகளும் பெண்மக்களும், பற்பல அப்ராம்மண கனவான்களும் கமழ்ந்திருந்தனர்.

அக்ராஸனர் தேவதாஸ்துதி சொல்லி ஸ்ரீ அமோகசாஸ்திரிகளையும் ஸ்ரீ அம்பாள் ஸ்துதி பாடச்சொன்னார். பிறகு $1\frac{1}{2}$-மணி முற்கால தற்கால ஸ்திதியையும், நமது விவாஹத்தின் மேன்மை மேனாட்டாரவர் தன்மை முதலியவைகளை சுருதி யுக்தி அனுபவங்களைக் கொண்டும், பற்பல ஆங்கிலத்தார் கூறும் மேற்கோள்களையும் காட்டி அத்யத்புதமாக எல்லோரும் திகைத்து நிற்கும்படி சுவையாக உபன்யஸித்தார். பிறகு பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ, ஸோமதேவசர்மா அவர்கள் ஸ்ரீ அயோத்யா ராமானுஜஜீயரிடமிருந்து

# பிராம்மண்ய விமர்சம்.

பிராம்மண்யம் என்பது பிராமணர்களால் பிரதி தினமும் செய்யப்படும் நித்திய நைமித்திகமான வேதோக்த கர்மானுஷ்டானம். வேதம் என்பது அனாதியானது. அது முக்காலங்களையும் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களையும் தேவர்கள் முதலான ஜாரயுஜம் அண்டஜம், ஸ்வேதஜம் முதலிய ஜீவஜந்துக்களின் உற்பத்தி விருத்தி அழிவு கர்மானுகுணமான பலானுபவங்கள் யாகாதிகளின் ஸங்கியை, அதின் காரிகை, பலன்கள் இன்னும் எண்ணிறந்த விஷயங்களை எளிதில் அறிந்துகொள்வதற்கு நிரம்ப அனுகூலமாயிருக்கிறது. பழையசரித்திர ஆராய்ச்சிக்காரர்களும் நவீனமாக ஈசுவரனையே கண்டுபிடித்து விட்டதாகத் தங்களைப் புகழ்ந்து சொல்லிக் கொள்பவர்களும் கூட இந்த வேதங்களை எழுதி வைத்தவர்கள் யார்? எந்தக்காலம்? எவ்விடத்தில் என்பதைப்பற்றி ஒருவர் அபிப்பிராயப்படி ஒருவர் எழுதுவதற்கு மனம் துணிவதில்லை உலகத்திலுள்ள வைதிகமதம் தவிரஸகலமதங்களும் ஒவ்வொரு காலத்தில்திடீரென்று தோன்றித்தாய்மதமான வேதக் கொள்கையோடு துர்வாதமசெய்யும்வரையில்பிரசித்திபெற்றிருந்து மின்னலொளிபோல் மறைந்து விட்டதைச் சரித்திரமூலமாய் காணலாம். நவநீதம், நெய், தயிர் முதலிய உத்தமமான பிரிவினங்களுக்கும் ஆஸ்பதம் தேவாமிருதத்தையொத்த பசுவின்பால் என்பது பிரஸித்தியான விஷயம். இதேமாதிரி ஸ்மிருதிகள் இதிஹாஸம் புராணங்கள் உபநிஷத்துக்கள் சாஸ்திரங்கள் முதலிய சகலத்துக்கும் முக்கியஆதாரமானது வேதம். ஒரே தண்டாகிருதியாயிருக்கும் வேதத்தைப் பிரதிமன்வந்திரங்களிலும் மன்வந்திராதிபதிகளால் நியமிக்கப்பட்ட வியாசர்கள் காலத்திற்கேற்றவாறு பிரித்து ஜனங்களுக்கு உபயோகமாகும்படி அனுக்கிரகித்து விடுகிறார்கள். அதிலிருந்து விஷயங்களைத் திரட்டி ஸ்மிருதிகர்த்தாக்கள் யுகத்திற்கேற்றவாறு தர்மசாஸ்திரங்களான சட்டங்களையும் இதிகாஸபுராணங்களையும் எழுதிவைத்திருக்கிறார்கள். இவ்வளவு பெருமை பொருந்திய வேதத்திலே வர்ணாசிரமதர்மங்களும் பிரம்மஞான மந்திரமும் அடங்கியுள்ளது இதை அப்பியசித்து அதிலுள்ள தர்மங்களைத்தாங்கள் அனுஷ்டிப்பதும் 2, 3, வர்ணங்களுக்கு அத்தியயனம் செய்வித்து அவர்களை அனுஷ்டிக்கும்படிச்

செய்வதும் பிராமணர்களின் கடமை. யாகம்பண்ணுவது பண்ணுவிப்பது வேதாத்தியயனம் செய்வது செய்விப்பது தானம் கொடுப்பது வாங்குவது முதலிய ஆறு கர்மங்களுக்குரியவன்என்பது பிர்மத்துக்கு பிராமணன் முகமாகிறான்என்று பொருள். ஸகலத்துக்கும் முகமே பிரதானமானது. இந்தக்காலத்தில் பிர்ம்மத்வேஷிகளான சில பிரபுக்கள் ஸகல ஜனங்களும்

जन्मना जायते शूद्रः कर्मणा जायते द्विजः ।
वेदाभ्यासेन विप्रत्वं ब्रह्मज्ञानेन ब्राह्मणः ॥

𑌜𑌨𑍍𑌮𑌨𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌶𑍂𑌦𑍍𑌰𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ।
𑌵𑍇𑌦𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑍇𑌨 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 ॥

பிறப்பினால் சூத்திரனாயும், செய்கையினால் த்விஜனாயும், வேதாப்பியாஸத்தால் விப்ரனாயும் பிர்ம்மஞானத்தால் பிராம்மணனாகவும் ஆய்விடுகிறார்கள். என்று அர்த்தம் செய்துகொண்டு துர்வாதம் பேசுகிறார்கள்.

இந்த வசனம் பிராம்மணர்களுக்கே உரியது என்பது நிச்சயம். பிராம்மணர்கள் பிறப்பினால் வேதத்தை வாயினால் உச்சரிக்கத்தகாத சூத்திரனுக்கு ஸமமாகவும் உபநயநஸம்ஸ்காரத்தால் துவிஜன் என்றும் வேதாப்பியாஸத்தால் விப்பிரத்வத்தையும் ஆசாரியமுகத்தால் உபதேசிக்கப்பட்ட பிர்மக்ஞானத்தால் பிராம்மணன் என்னும் பெயர்களை அடைகிறார்கள். பிறப்பினாலேயே பிராம்மணன்தான் உயர்ந்தவனென்று கர்வம் கொள்ளக்கூடாது. சூத்திரர்கள் வேதங்களைக் கேட்கக் கூடாது. ஆகையால்தான் மஹாபாரதம் ஸநத்ஸுஜாதபர்வத்தில்

शूद्रयोनावहं जातः नातोन्यद्वक्तुमुत्सहे ।

𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑍋𑌨𑌾𑌵𑌹𑌂 𑌜𑌾𑌤𑌃 𑌨𑌾𑌤𑍋𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍁𑌤𑍍𑌸𑌹𑍇 ।

திருதராஷ்டரமகாராஜனிடம் பிர்ம்மக்யானத்தைப்பற்றிப்பிரஸ்தாபம் வரும்போது விதுரர் தான் தர்மராஜர் அம்சமும் வேதவ்யாஸரிஷியின் வீர்யமாயிருந்தும் ஸகல நீதியும் தனக்குத் தெரிந்திருந்திருந்தும் மாதுர்ஜாதி தோஷத்தால் தன் வாயினால் அதைச் சொல்ல மனந்துணியாது :பிர்ம்ம புத்திரரான ஸநத்ஸுஜாதரை வரவழைத்துச்சொல்லும்படி கேட்டுக்கொண்டார். (இன்னும்வரும்)

தீ. நா. தாதாதேசிகாசார்யார்.

## ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு சென்னை தம்புசெட்டித்தெருவிலுள்ள ஸ்ரீ சங்கரமடத்தில்

# ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாள்

### விபவ-வருஷத்திய

# ஜயந்தி மகோற்சவப் பத்திரிகை.

**कांचीपुराभरण कामद कामकोटिपीठाभिषिक्तवरदेशिकसार्वभौम ।**
**सार्वज्ञशक्त्यधिगताखिलमन्त्रतन्त्रचक्रप्रतिष्ठितविजृंभितचातुरीक ॥**
**श्रुतिस्मृतिपुराणाना मालयं करुणालयम् ।**
**नमामि भगवत्पादं शंकरं लोक शंकरम् ॥**

𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌪𑍁𑌰𑌾𑌭𑌰𑌣 𑌕𑌾𑌮𑌦 𑌕𑌾𑌮𑌕𑍋𑌟𑌿𑌪𑍀𑌠𑌾𑌭𑌿𑌷𑌿𑌕𑍍𑌤𑌵𑌰 𑌦𑍇𑌶𑌿𑌕𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮 । 𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌧𑌿𑌗𑌤𑌾𑌖𑌿𑌲𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌚𑌕𑍍𑌰𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌵𑌿𑌜𑍃𑌂𑌭𑌿𑌤𑌚𑌾𑌤𑍁𑌰𑍀𑌕 ॥
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌨𑌾 𑌮𑌾𑌲𑌯𑌂 𑌕𑌰𑍁𑌣𑌾𑌲𑌯𑌮𑍍 ।
𑌨𑌮𑌾𑌮𑌿 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌂 𑌶𑌂𑌕𑌰𑌂 𑌲𑍋𑌕 𑌶𑌂𑌕𑌰𑌮𑍍 ॥

ஸ்ரீ கைலாஸவாசியான பரமேசுவரன் பிரம்மாதிதேவர்களின் பிரார்த்தனைக்கிணங்கி லோகக்ஷேமார்த்தமாய் தர்மஸ்தாபனம் செய்யவேண்டி சுமார் 2000-வருஷங்களுக்கு முன் இப்புவில் காலடி என்னும் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ கைலாஸபதியே மானிட உருவந்தாங்கி ஸ்ரீ சங்கரபகவத்பாதாளாய் அவதரித்து தேசமுழுவதும் திக்விஜயம் செய்து அனேக துர்மதங்களைக் கண்டித்து ஷண்மதஸ்தாபனம் செய்து அத்வைத மதத்தை நிலை நாட்டி, உத்தமமான பல க்ஷேத்திரங்களில் யந்திரஸ்தாபநம் செய்து கடைசியில் மோக்ஷநகரில் ஒன்றாகிய ஸ்ரீகாஞ்சிக்ஷேத்திரத்தையடைந்து அந்த க்ஷேத்திரத்தை ஸ்ரீ சக்ராகாரமாய் நிர்மாணம் செய்து பிந்துஸ்தானத்தில் ஸ்ரீ காமகோடி பீடத்தை ஸ்தாபனம் செய்து ஜகதம்பிகையான ஸ்ரீகாமாக்ஷிதேவியின் ஸன்னிதானத்தில் ஸ்ரீசக்ர பிரதிஷ்டை செய்தும் ஸர்வக்ஞபீடாதிரோகணம் செய்தும் இன்றைக்கும் நமது பாரதபுண்ணிய பூமியிலுள்ள அனேக க்ஷேத்திரங்களில் அர்ச்சாவதாரரூபராய் விளங்கிக்கொண்டு பக்தகோடிகளுக்கு அநுக்கிரஹம் புரிந்துவருவது யாவரும் அறிந்த விஷயம்.

அப்படிப்பட்ட பரமாசார்யாளுடைய அவதார சுபதினம் விபவ-ஸ்ரீ சித்திரைமீ 12உ பௌமவாரம் வருவதை முன்னிட்டு ஜகத்குரு ஸ்ரீ பகவத்பாதாள் ஜன்ம மஹோத்சவத்தைக் கொண்டாடக்கருதி நாளது சித்திரைமீ 8உ (20-4-28) சுக்ரவாரம் முதல் சென்னை தம்புசெட்டித் தெரு119-வது லக்கமுள்ள ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீமஹாஸ்வாமிகள் மடத்தில் காலையில் மஹந்யாஸபூர்வம் அபிஷேகம், அர்ச்சனை, வேதபாராயணம், ப்ரஸ்தானத்ரய பாஷ்யபாராயணம், மாலையில் அரியபெரிய உபன்யாஸங்கள், அலங்காரம், தீபாராதனை, விநியோகங்களும் (24-4-28) பௌமவாரம் அவதார தினத்தன்று விசேஷ பூஜை ஸந்தர்ப்பணை, தீபாராதனை, பானகபூஜை, விநியோகம் முதலியவைகளும், ஸ்ரீ பகவத்பாதாளுக்கு ஸகலஸந்நாஹ வைபவங்களுடன் பட்டண ப்ரவேசமும், நடத்துவதாக உத்தேசித்திருப்பதால் பக்தகோடிகள் யாவரும் நாள்தோறும் வந்திருந்து, ஸ்ரீமத் ஆசார்யமூர்த்தியைத் தரிசித்தும் ஸத்விஷய உபந்யாஸாதிகளை ச்ரவணம் செய்தும் ஸ்ரீ பரமாசார்ய பூர்ணாநுக்ரஹ பாத்திராளாய் ஐஹிகாமுஷ்மிக சிரேயஸ்ஸுகளை அடையவேண்டுமாய் கோரப்படுகிறது.

சங்கரபக்தர்கள்.

---

*N. B.* ☞ அரிய கைங்கர்யமானதால் பக்திமான்களால் செய்யப்படும் திரவ்யஸகாயம் ஷை ஸத்கார்யங்களுக்கு உபயோகிக்கப்படும்.

---

## ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யஸ்வாமிகளின் ஜந்மதின மஹோத்ஸவப் பத்திரிகை.

आराध्यतेऽसौ गुरुराडमुत्र वीथ्युत्सवाद्यैर्विभवैर्नितान्तम् ।
विद्वत्प्रवेका अपि वाङ्मुखानि वितन्वते यावदिहाप्रियाणि ॥

ஆராத்⁴யதே(அ)ஸௌ குருராட³முத்ர வீத்²யுத்ஸவாத்³யைர் விப⁴வைர்நிதாந்தம் । வித்³வத்ப்ரவேகா அபி வாங்முகா²நி விதந்வதே யாவதி³ஹாப்ரியாணி ।

ஆஸ்திகர்காள்! ஸ்ரீ கைலாஸவாஸியான பரமேச்வரன் ப்ரஹ்மாதிதேவர்களின் ப்ரார்த்தனானுஸாரியாய் ஸ்ரீசங்கரர் என்னும் திவ்யநாமத்துடன் இப்புண்யபூமியாகிய பரதகண்டத்தின்கண் அவதரித்து, கலியின் பிரபாவத்தினால் அக்காலத்தில் எங்கும் பரவி நின்ற எழுபத்திரண்டு துன்மதங்களைக்கண்டித்து, நான்குவர்ணங்களைச்சார்ந்த சமஸ்த ஆஸ்திக சிஷ்யகோடிகளும் உஜ்ஜீவிக்கும்படி வைதிகமான சைவம், வைணவம், முதலிய ஆறுமதங்களையும், முக்யமாக அத்வைதமதத்தையும் ஆஸேது ஹிமாசலம் வரையுள்ள முக்ய க்ஷேத்திரங்களுக்குச்சென்று ஆங்காங்கு ஷடி மதத்தைப் பரவச்செய்த விஷயம் யாவரும் அறிந்ததே.

இவ்விதம் பேருபகாரத்தைச்செய்த ச்ரேஷ்டாளாகிய ஆதி சங்கராசார்யாளுடைய பதினோருவது ஜன்மதினமஹோத்ஸவமானது பாஹுநதிக்கரையில் அமையப்பெற்ற மண்டகொளத்தூர் அக்ரஹாரத்தில், விபவநாம ஸம்வத்ஸரம் சித்திரை-மீ 12வ. செவ்வாய்க்கிழமை (24—4—28) வைசாகசுத்த பஞ்சமியன்று காலை ஸ்ரீமதாசார்யபூஜை, வேதம் முதலான பாராயணம், அதிதிஸத்காரம், உசிதகாலங்களில் அரியவித்வான்களின் உபந்யாஸங்கள், இரவு ஸ்ரீமதாசார்ய பிப்பத்திற்கு வீதியில் உத்ஸவம் இவை முதலான வைபவங்களுடன் நடைபெறும். அவ்வமயம் ஆஸ்திக சிஷ்யகோடிகளனைவரும் வந்திருந்து தங்களாலான உதவியைப் புரிந்து பூஜைமுதலிய வைபவங்களைத் தர்சித்து ஸ்ரீமதாசார்யாளுடைய பரிபூர்ண கிருபைக்குப் பாத்திராளாகும்படி ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

சங்கரநிலயம்,<br>மண்டகொளத்தூர்,<br>9—3—28.

இப்படிக்கு,<br>**சிஷ்ய கோடிகள்.**

---

குறிப்பு:— இந்நிலயம் கும்பகோணம் மடம் ஸ்ரீமதாசார்யபாதாளுடைய அனுக்ரஹத்தையும் ஆதரவையும் ஸ்ரீமுகத்வாரா பெற்று நடந்து வருகிறது.